# A STUDY ON THE PROBLEMS FACED BY FARMERS IN PADDY CULTIVATION, IN KORALAI PATTU CENTRAL DIVISIONAL SECRETARIATE.

LIBRARY
08 MAY 2007
Eastern University, Sri Lanka

MOHAMED BUHARY MOHAMED FAIZAL

FCM353
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE & MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRILANKA

## பொருளடக்கம்

பக்க எண்

ஆய்வுச்சுருக்கம்

நன்றியுரை

அத்தியாயம் - 01 01-06

1.1. ஆய்வுப்பின்னணி
1.2 ஆய்வுப்பிரதேசம்
1.3 ஆய்வுப்பிரச்சினை
1.4 ஆய்வின் நோக்கம்
1.5 ஆய்வின் எடுகோள்கள்
1.6 ஆய்வின் வரையறைகள்

அத்தியாயம் - 02 07-20

2.1. இலங்கையின் வேளாண்மைத்துறை
2.2. இலங்கையின் நெல் உற்பத்தி
2.2.1. முக்கியத்துவம்
2.2.2. நெல் உற்பத்தியில் அண்மைக்கால போக்கும் அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களும்
2.2.3. இலங்கையின் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்படும் பிரதேசங்கள்
2.2.4. நெற்செய்கைக்கு ஏற்ற நெல்லினங்கள்
2.2.5. பாதுகாப்பான நெற்செய்கை முறை
2.2.6. நீர்ப்பாசனத்திட்டங்கள்
2.2.7. நெற்சந்தைப்படுத்தல்
2.3. இலங்கையின் பெருந்தோட்டத் துறையும் அதன் பங்களிப்பும்
2.4. இலங்கையின் வேளாண்மைக் கொள்கைகள்
2.5. நெல் உற்பத்தி தொடர்பான ஆய்வுகள்

அத்தியாயம் - 03 21-26

3.1. எண்ணக்கருவாக்கம்
3.2. எண்ணக்கருவாக்கத்துக்கான நடைமுறையாக்கம் செய்தல்
3.2.1. உள்ளீடுகளின் கிடைப்பளவு
3.2.2. முதைன வசதிகளின் கிடைப்பளவு
3.2.3. நவீன தொழில்நுட்ப கிடைப்பளவு

3.2.4. உட்கட்டமைப்பு வசதிகள்
3.2.5. நிலப்பயன்பாட்டுரிமை
3.2.6. அரசாங்க ஊக்குவிப்புக்கள்
3.3. ஆய்வு முறை
3.3.1. தரவுசேகரிக்கும் முறை
3.3.2. மாதிரியெடுப்பு
3.3.3. தரவு பகுப்பாய்வு முறையும் தரவு மதிப்பீட்டு முறையும்

அத்தியாயம் - 04 27-47

4.1. அறிமுகம்
4.2. தரவுப்பகுப்பாய்வு
4.2.1. தரவுமுன்வைத்தலும் தரவுப்பகுப்பாய்வு செய்தலும்
4.2.2. ஆய்வுத்தகவல் பகுப்பாய்வு
4.3. கலந்துரையாடல்
4.3.1. தனிப்பட்ட தகவல் தொடர்பான கலந்துரையாடல்
4.3.2. ஆய்வுத்தகவல் தொடர்பான கலந்துரையாடல்

அத்தியாயம் - 05 48-61

5.1. அறிமுகம்
5.1.1. உள்ளீடுகளின் கிடைப்பனவு
5.1.2. மூலதன வசதிகளின் கிடைப்பனவு
5.1.3. நவீன தொழில்நுட்ப கிடைப்பனவு
5.1.4. உட்கட்டமைப்பு வசதிகள்
5.1.5. நிலப்பயன்பாட்டுரிமை
5.1.6. அரசாங்க ஊக்குவிப்புக்கள்
5.2. முடிவுரை
5.3. சம்பந்தப்படுத்தல்

பின்னிணைப்புக்கள்

- உசாத் துணைநூல்கள்
- வினாகொத்துக்கள்
- கோறளை பற்று மத்திய பிரதேச செயலகப்பிரிவின் வரைபடம்

# ஆய்வுச்சுருக்கம்

கிழக்குப் பல்கலைகழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தின் இறுதியாண்டு கற்கைநெறியினை பூர்த்திசெய்யும் பொருட்டு இவ்வாய்வுக் கட்டுரையானது சமர்ப்பிக்கப்படுகிறது.

இவ்வாய்வுக் கட்டுரையானது 'கோறளை பற்று மத்திய பிரதேச செயலகப் பிரிவில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மீதான ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்படுகிறது. இங்கு போதியளவு நெற்செய்கைக்கான வளங்கள் காணப்படுகின்ற போதிலும் இலங்கையின் ஏனைய நெல் உற்பத்தியாகும் பிரதேசங்களுடன் ஒப்பிடுகின்ற போது இப்பிரதேசத்தின் சராசரி விளைச்சல் குறைந்த மட்டத்திலே உள்ளது. இந்த நிலையில் இப்பிரதேச விவசாயிகள் எவ்வாறு தமது விளைச்சலை அதிகரிக்கலாம் என்பதை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு காணப்படுகிறது. இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களாக ஆய்வுப்பிரதேசத்தின் நெற்செய்கை போக்கினை அறிந்து கொள்ளுதல், இப்பிரதேச விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல், அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கான சிறந்த தீர்வினை முன்வைத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாய்வின் எண்ணக்கருவாக்கமானது உயர்வான நெல்விளைச்சலை அடையும் வகையில் உள்ளீடுகளின் கிடைப்பனவு, மூலதன வசதிகளின் கிடைப்பனவு, நவீனதொழில்நுட்ப கிடைப்பனவு, உட்கட்டமைப்பு வசதிகள், நிலப்பயன்பாட்டுரிமை, அரச நிறுவனங்களின் ஊக்குவிப்புக்கள் போன்வற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாய்வுக்கான தரவு சேகரிப்பில் முதலாம் தரத் தரவானது கள ஆய்வின் போது வினாக்கொத்துக்களை வழங்கி பெறப்பட்டது. இரண்டாம் தரத் தரவானது ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள், விவசாய துறைசார்ந்த தகவல்களை வழங்குகின்ற நிறுவனங்களின் அறிக்கைகள், மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டது. மேலும் இப்பிரிவில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயக்குடும்பங்களாக 505 குடும்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 100 குடும்பங்களை எழுமாறாக தெரிவுசெய்து வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. இங்கு வினாக்களுக்கு புள்ளியிடல் முறையினைப் பயன்படுத்தி சராசரி இடை கணிப்பிடப்பட்டு தரவுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட எண்ணக்கருவாக்கங்கள் தொடர்பில் குறைந்த மட்ட திருப்தி நிலையினையே இப்பகுதி விவசாயிகள் கொண்டுள்ளனர். இந்நிலைக்கு பல பிரச்சினைகள் தடைகளாக உள்ளன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வினை அடையும் வகையில் சிபார்சுகள் முன்வைக்கப்படுகின்றன. மேலும் இங்கு குறிப்பிடப்பட்ட சிபார்சுகள் அனைத்தும் நடைமுறைப்படுத்துவதற்கு அனேகமாக அரசாங்கம் மற்றும் விவசாயத்துக்கு பங்களிப்புச் செய்கின்ற நிறுவனங்களின் செயற்பாடுகளிலே தங்கியுள்ளது. அதாவது அரசாங்க கொள்கையில் மாற்றங்களை கொண்டுவருதல், விவசாயத்துடன் தொடர்புபட்ட அரச திணைக்களங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய உதவி வழங்கும் நிறுவனங்கள் இவற்றின் செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் இப்பிரதேச விவசாயிகள் எதிர்காலத்தில் நெல் விளைச்சலை அதிகரிக்க வழிவகுக்க முடியும்.

\- ஆய்வாளர்